Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41 கதிர் : 129 | சனிக்கிழமை 04 ஏப்ரல் 2026 | பங்குனி 21 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் -12
விலை - ரூபா 50

## வடக்கில் இன்று இடியுடன் மழை!

கொழும்பு, ஏப். 4
வடக்கு மாகாணத்தின் பல் வேறு பகுதிகளில் இன்று இடியுடன் கூடிய மழைக்குச் சாத்தியம் உள்ளது என இலங்கை வளி மண்டலவியல்

»11

பிள்ளையானின் வதைமுகாமிலேயே

# பேராசிரியர் ரவீந்திரநாத் கொலையுண்டு எரிப்பு!

குற்றப் புலனாய்வுப் பிரிவு 'திடுக்' தகவல்



கொழும்பு, ஏப்ரல் 4

பிள்ளையானால் நடத்தப்பட்ட வதைமுகாம் ஒன்றிலேயே, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், பேராசிரியருமான ரவீந்திரநாத் படுகொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டார் என்று நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

»11

## பிள்ளையானுக்கு மறியல் சட்டவிரோத நடவடிக்கை!

கம்மன்பில குமுறல்



கொழும்பு, ஏப். 4
பிள்ளையானை தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைத்திருக்கு மாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ஏற்க முடியாது. இது சட்ட விரோதம். எனவே,

»11

நாடளாவிய ரீதியில் இன்று

## அரச மருத்துவர்கள் மீண்டும் போராட்டம்

கொழும்பு, ஏப். 4
நாடளாவிய ரீதியில் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.
சுகாதாரக் கட்டமைப்பில் காணப்படும் நெருக்கடி நிலைமை அகற்றப்பட வேண்டும், மருத்துவர்களின் இடமாற்றங்கள் முறைப்படி

»11

வலுசக்தி அமைச்சருக்கு எதிராக

## நம்பிக்கையில்லாப் பிரேரணை; ஆளுங்கட்சியினர் முடிவில்லை

தார்மீகப் பிரச்சினை உள்ளதாக ஒப்புதல்

கொழும்பு, ஏப். 4
வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக, எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தார்மீகப் பிரச்சினைகள் உள்

»11



## வடமராட்சி கிழக்கில் மீண்டும் யானைகள்!

பயன்தரு மரங்கள் அழிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4
வடமராட்சி கிழக்கு - சுண்டிக்குளம் பகுதிக்குள் நுழைந்த காட்டு யானைகளால் பெருமளவு தென்னைகள் மற்றும் பயன்தரு மரங்கள் என்பன அழிக்கப்பட்டுள்ளன.

»11

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விற்பனை செய்யப்படாது

அரசாங்கம் தெரிவிப்பு

விரிவு பக்கம்:- 02





## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் வெட்டிப் படுகொலை

காலியில் பயங்கரம்
முன்னாள் சிப்பாய் கைது



கொழும்பு, ஏப். 4
காலி - தெலிகட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், முன்னாள் இராணுவச் சிப்பாயால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.
மேலும் ஒருவர் படுகாயங்களுடன், உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
நீண்ட நாள்களாக நிலவிய குடும்பத் தகராறு காரணமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர்கள் இருவரும் வயோதிபர்கள் என்று பொலி

»11

தேசிய கால்பந்தாட்டம்

## சௌந்தர்ஸ் - சென். மேரிஸ் இறுதியாட்டத்தில் மோதல்!

விரிவு பக்கம்:- 06

## சட்டமியற்றலில் அரசு பலவீனம்



ஜி.எல்.பீரிஸ் அதிருப்தி

விரிவு பக்கம்:- 02

கிளிநொச்சி

## தருமபுரத்தில் கோரவிபத்து இரண்டு இளைஞர்கள் பலி

கிளிநொச்சி, ஏப். 4
ஏ-35 பரந்தன் - முல்லைத்தீவு வீதியில், கிளிநொச்சி-தருமபுரம் பொலிஸ் நிலையத்துக்கு அருகாக நேற்று இரவு இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில், இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.
ஜெரின் கனிஸ்ரன் (வயது-19), தியாகராசா விக்கினேஸ்வரன் (வயது-18) ஆகிய இரு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.
வீதியால் சென்று கொண்டிருந்த

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 03.04.2026 | திகதி 03.04.2026 | திகதி 03.04.2026 | திகதி 03.04.2026 | திகதி 03.04.2026 | திகதி 03.04.2026 | திகதி 03.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4395 | சீட்டிழுப்பு இலக்கம் 1462 | சீட்டிழுப்பு இலக்கம் 0421 | சீட்டிழுப்பு இலக்கம் 2501 | சீட்டிழுப்பு இலக்கம் 6153 | சீட்டிழுப்பு இலக்கம் 2183 | சீட்டிழுப்பு இலக்கம் 0269 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கினம் மேஷம் | ஆங்கில எழுத்து K | ஆங்கில எழுத்து U | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கினம் மேஷம் |
| | | | சுப்பர் இலக்கம் 13 | | | |
| வெற்றி இலக்கங்கள் 11 47 52 71 | வெற்றி இலக்கங்கள் 26 35 49 58 | வெற்றி இலக்கங்கள் 6 2 6 3 | வெற்றி இலக்கங்கள் 06 07 22 43 | வெற்றி இலக்கங்கள் 9 4 4 4 6 0 | வெற்றி இலக்கங்கள் 39 46 48 58 | வெற்றி இலக்கங்கள் 22 28 37 |
| விசேட எழுத்து H | | | | | விசேட எழுத்து F | |

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தைவிட புதிய சட்டவரைவு பாரதூரமானது!

## விஜயதாச ராஜபக்ச தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 4**

**ஆட்சிக்கு வந்தவுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக உறுதியளித்த தற்போதைய அரசாங்கம், நடைமுறையில் உள்ள சட்டத்தை விடவும் மிகவும் பாரதூரமான புதிய சட்டவரைவு ஒன்றையே தயாரித்துள்ளது - என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்துக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினரே நீதிமன்றம் சென்று அந்த நடவடிக்கைகளைத் தடுத்தனர்.

ஆனால், இன்று ஆட்சிக்கு வந்த பின்னர் அந்தச் சட்டத்தை நீக்குவதற்குப் பதிலாக, அதை விடக் கடுமையான சட்டங்களைக் கொண்டுவர முயற்சிக்கின்றனர்.

தற்போதைய அரசாங்கம் தயாரித்துள்ள 'அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவு', தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விடவும் அதிக ஆபத்தானது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச்செய்வதாகக்கூறி ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, தற்போது அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி மாத்திரமே கைதுகளை முன்னெடுத்துவருகிறது.

அரசாங்கம் தனது தேர்தல் கால வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, அடக்குமுறைச் சட்டங்களைத் தக்கவைக்க முயற்சிப்பது முற்றிலும் தவறான செயலாகும் - என்றார். (ச-இ)

## சுபிரி தன சம்பத

திகதி 03.04.2026 · தினம் வெள்ளிக்கிழமை · வெற்றி வாரம் 0861

ஆங்கில எழுத்து Z · வெற்றி இலக்கம் 3 1 6 4 7 0

## Super Ball

திகதி 03.04.2026 · தினம் வெள்ளிக்கிழமை

சீட்டிழுப்பு வாரம் 3127 · ஆங்கில எழுத்து F · வெற்றி இலக்கம் 21 40 66 73

## சனிதா

திகதி 03.04.2026 · தினம் வெள்ளிக்கிழமை

ஆங்கில எழுத்து L · வெற்றி இலக்கம் 10 27 52 55 · வெற்றி வாரம் 5288

## SASIRI

திகதி 03.04.2026 · தினம் வெள்ளிக்கிழமை

வெற்றி வாரம் 0956 · வெற்றி இலக்கம் 15 20 26

## லக்ன ராசி

திகதி 03.04.2026 · தினம் வெள்ளிக்கிழமை

கடகம் · வெற்றி இலக்கம் 07 08 31 61 · சீட்டிழுப்பு வாரம் 4839

## KAPRUKA

திகதி 03.04.2026 · தினம் வெள்ளிக்கிழமை

ஆங்கில எழுத்து U · சுப்பர் இலக்கம் 21 · வெற்றி இலக்கம் 42 55 58 65 · வெற்றி வாரம் 2303

## அத கோடிபதி

திகதி 03.04.2026 · தினம் வெள்ளிக்கிழமை

ஆங்கில எழுத்து I · வெற்றி இலக்கம் 14 19 35 54 · வெற்றி வாரம் 2953

# சட்டமியற்றல் செயற்பாடு கேள்விக்குறியாகியுள்ளது

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 4

அரசாங்கம் முறையான ஆலோசனையின்றிச் சட்டவரைவுகளைத் தயாரிப்பதனால், அவை மக்கள் மத்தியில் சட்டமியற்றல் குறித்துத் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்றன என்று முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தின் அரசியல் நோக்கங்களுக்கு அமையச் சட்டவரைவுகளைத் தயாரிக்குமாறு சட்டவரைவுத் திணைக்களம் வற்புறுத்தப்படுவதை அவதானிக்கமுடிகிறது.


இதனால், தன்னிச்சையாகத் தயாரிக்கப்படும் பல சட்டவரைவுகள் வெளியிடப்பட்ட பின்னர் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகின்றன.

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்படும் பல சட்டவரைவுகள், பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் எதிர்ப்புக்குப் பிறகு அரசாங்கத்தாலேயே மீளப்பெறப்படுகின்றன.

இவ்வாறான முன்னுக்குப் பின் முரணான செயற்பாடுகள், நாட்டின் சட்டமியற்றும் பொறிமுறை மீதான நம்பிக்கையைச் சிதைக்கின்றன.

சட்டங்களை இயற்றுவதற்கு முன்னர், அது தொடர்பான துறைசார் நிபுணர்கள் மற்றும் முறையான தரப்பினரிடமிருந்து ஆலோசனைகளைப் பெறவேண்டும். அவசரகதியில் சட்டங்களை நிறைவேற்ற முற்படுவதைத் தவிர்த்து, முறையான சட்ட ஆலோசனைகளைப் பெற்றுச் சட்டமூலங்களைத் தயாரிக்கவேண்டும். அரசாங்கத்தின் இத்தகைய பலவீனமான சட்டமியற்றல் நடைமுறை, ஜனநாயக விழுமியங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் - என்றார். (ச-இ)





# ரெலிகொம், எயார்லைன்ஸ் விற்பனை செய்யப்படாது!

## உயர்நீதிமன்றுக்கு அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 4

ஸ்ரீலங்கா ரெலிகொம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உள்ளிட்ட எட்டுப் பிரதான அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு முன்னைய அரசாங்கம் எடுத்திருந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப்போவதில்லை எனத் தற்போதைய அரசாங்கம் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

முன்னைய அரசாங்கத்தின் விற்பனை முயற்சிக்கு எதிராக கலாநிதி குணதாச அமரசேகர உள்ளிட்டோரால் தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு, நீதியரசர்களான அச்சல வெங்கப்புலி, மஹிந்த சமயவர்தன மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய மூவர் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி, முன்னைய அரசாங்கம் பட்டியலிட்டிருந்த அரச நிறுவனங்களை விற்பனை செய்யும் தீர்மானத்தை தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்காது.

இந்த நிறுவனங்களை விற்பனை செய்வதற்குப் பதிலாக, அவற்றை முறையானவகையில் மறுசீரமைப்புச் செய்வதற்காக மாத்திரம் ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அரசாங்கம் விற்பனை செய்யும் முடிவைக் கைவிட்டுள்ளதால் இந்த மனுவை மேலும் முன்னெடுத்துச் செல்லத் தேவையில்லை எனத் தெரிவித்து உயர்நீதிமன்றம் குறித்த மனு மீதான விசாரணையை நிறைவுக்குக் கொண்டுவந்தது. (ச-இ)

# விளாடிவோஸ்டாக் ஊடாக ரஷ்யாவுடன் வர்த்தகம்!

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 4**

**இலங்கையின் அமைவிடத்தைப் பயன்படுத்தி ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் நகருடன் நேரடி வர்த்தகத்தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

ஏற்கனவே ரஷ்யாவுடன் ஸ்திரமான வான்வழித் தொடர்புகள் காணப்படுவதால், வணிக ரீதியிலான விமானச்சேவைகள் ஊடாக சரக்குப் போக்குவரத்தை உடனடியாகத் தொடங்க முடியும். சீனா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுடன் இலங்கை கொண்டுள்ள கடல்வழித் தொடர்புகள் விளாடி வோஸ்டாக் வர்த்தகத்துக்குப் பெரிதும் உதவும்.

இந்த நாடுகள் விளாடிவோஸ்டாக் துறைமுகத்துக்கு மிக அருகில் அமைந்துள்ளன.

எனவே, யூரேசிய போக்குவரத்துக் கட்டமைப்பின்கீழ் கடல்சார் வர்த்தகத்தை மேம்படுத்தமுடியும். இந்தியப் பெருங்கடலின் முக்கியமான கப்பல் போக்குவரத்துப் பாதையில் இலங்கை அமைந்துள்ளமை, ரஷ்யாவுடனான விரைவான வர்த்தக இணைப்புகளை ஏற்படுத்தப் பெரும் பலமாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளாதாரப் பாதையில் இலங்கை முன்னேற்றம்!

## ஐ.எம்.எப். பாராட்டு

**கொழும்பு, ஏப். 4**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவத்தைப் பாராட்டியுள்ள சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் பொருளாதாரம் தற்போது சவால்களைத் தாங்கும்நிலைக்கு உயர்ந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.**

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணயநிதியத்தின் நீடிக்கபட்ட கடன் வசதித்திட்டத்தின்கீழ் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஐ.எம்.எப். உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயகவைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது கடன் வசதித்திட்டத்தின் 5 மற்றும் 6ஆவது மீளாய்வுகளின் தற்போதைய நிலை குறித்து திருப்தி வெளியிடப்பட்டது. பொருளாதார வளர்ச்சி இலக்குகளைத் துல்லியமாக அடைந்து வருவதில் அரசாங்கம் காட்டும் அர்ப்பணிப்பு அங்கீகரிக்கப்பட்டது. மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழலால் ஏற்பட்டுள்ள வெளிப்புறச் சவால்கள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதன்போது விளக்கமளித்தார்.

உலகளாவிய நெருக்கடிகளுக்கு மத்தியில் எரிபொருள் விலை மற்றும் மின்சார விநியோகத்தில் ஏற்படும் தாக்கங்களை முகாமைத்துவம் செய்ய அரசாங்கம் விசேடதிட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. பொருளாதார மறுசீரமைப் பின்போது பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைப்பதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்படுவதாக ஜனாதிபதி உறுதியளித்தார். (ச-இ)



## இலங்கைக் கிரிக்கெட்டுக்கு வெளிநாட்டு பயிற்சியாளர்கள்

கொழும்பு, ஏப். 4


ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தனது தேசிய உயர் செயல்திறன் மையத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இரண்டு புதிய சர்வதேச பயிற்சியாளர்களை நியமித்துள்ளது. அதன்படி புதிய பந்துவீச்சுப் பயிற்சியாளராக ரையான் வான் நீகெர்க், களத்தடுப்பு மற்றும் சுழற்பந்து வீச்சு பயிற்சியாளராக ஜோர்டன் கிரெகரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

## வெவ்வேறு மூன்று கொலைகள் நால்வருக்கு மரணதண்டனை!

கொழும்பு, ஏப். 4

நீண்டகாலமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த மூன்று வெவ்வேறு கொலை வழக்குகள் தொடர்பில் நான்கு சந்தேகநபர்களுக்கு நுவரெலியா மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

1998 ஆம் ஆண்டு நாணுஓயா பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில், லிந்துலை மெரயா தோட்டத்தை சேர்ந்த 47 வயதுடைய குற்றவாளி ஒருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு பட்டிப்பொல பகுதியில் தனது தாய், மனைவி மற்றும் பிள்ளையைக் கொலை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட 55 வயதுடைய நபருக்கு மரணத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதேதேவளை 1990ஆம் ஆண்டு பொவந்தலாவ பகுதியில் ஆயுதத்தால் தாக்கி ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் 64 மற்றும் 62 வயதுடைய இருவருக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## தருமபுரத்தில் சட்டவிரோத மணல் கடத்தல் நான்கு டிப்பர்கள் பறிமுதல்!

யாழ்ப்பாணம், ஏப். 4

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில், அனுமதிப்பத்திர நடைமுறைகளைமீறி சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச்சென்ற 4 டிப்பர் வாகனங்களை விசேட அதிரடிப்படையினர் நேற்று அதிகாலை பறிமுதல் செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கல்லாறு பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டபோது டிப்பர்களுடன் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காகத் தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். தருமபுரம் பொலிஸார் ஆரம்பக்கட்ட விசாரணைகளை முன்னெடுத்து குறித்த நான்கு சாரதிகளையும் பொலிஸ் பிணையில் விடுவித்தனர். (ச-இ)

## அன்னைபூபதியின் நினைவேந்தல் நாளை

யாழ்ப்பாணம், ஏப். 4

தமிழர் தாயகத்தில் அமைதிப்படை எனும் போர்வையில் இந்திய இராணுவம் புரிந்த அடக்குமுறைக்கு எதிராக மட்டக்களப்பில் தொடர்ச்சியாக 31 தினங்கள் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் மல்லாகத்தில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அனைத்து உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் [illegible] ளனர். (ச-இ)




## புதைகுழியிலையும் அரசியல்!

முந்தியொரு பகிடிக்கதை சொல்லுவினம். ஒரு சின்னப் பெடியன் பள்ளிக்கூடத்துக்குப் பலகாரம் கொண்டு போய், இடைவேளை நேரத்தில சாப்பிட்டிருக்கிறான். அப்ப அவன்ர சிநேகிதப் பெடியன் அதைக் கண்டிட்டு கொஞ்சப் பலகாரம் தரச் சொல்லிக் கேட்டிருக்கிறான். பலகாரம் கொண்டு போன பெடியனோ மாட்டன் எண்டிருக்கிறான். அதுக்கு மற்றப் பெடியன் 'உனக்கு என்னெண்டு பலகாரம் வந்தது?' எண்டு கேட்டிருக்கிறான். அதுக்கு இவன் 'எங்கட அப்பா செத்து நேற்று அந்தியேட்டி. அதுக்குச் செய்த பலகாரம் தான் இது' எண்டு சொல்லியிருக்கிறான். உடன மற்றவன் 'ஓ அப்பிடியோ! எனக்கும் அப்பா இருக்கிறார் தானே. அவரின்ர அந்தியேட்டிக்கும் பலகாரம் செய்வினம் தானே. அதை உனக்கு நான் தராமல் காட்டிக் காட்டி சாப்பிடுவன்' எண்டானாம். இப்பிடி அடுத்தவைக்கு கெட்டது நடந்தால் அது தங்களுக்கும் நடக்கோணும், அதை வைச்சு அனுதாபம் தேடோணும் எண்டு ஒரு கூட்டமே அலைஞ்சு கொண்டிருக்குது.

செம்மணி, கொக்குத்தொடுவாய், மன்னார் எண்டு தமிழ் ஆக்கள் இருக்கிற இடமெல்லாம் மனிதப்புதைகுழியளைக் கண்டுபிடிச்சவை எல்லோ. அந்தப் புதைகுழியளும், அதுக்க இருந்து மீட்கப்படுகிற மனிசரின்ர எலும்புகளும் தான் இஞ்ச ஒரு இனப்படுகொலை நடந்தது எண்டதுக்கான கண்கண்ட சாட்சியமா இருக்கப் போகுது. 'இப்பிடியெல்லாம் தமிழ்ச்சனத்தை படுகொலை செய்திருக்கிறாங்களே' எண்டு உலகம் முழுக்க அனுதாப அலையும் அடிக்குது. இதைப் பார்த்த இன்னொரு சிறுபான்மை இனக்காரர் 'எங்கட இனத்தையும் படுகொலை செய்தவை, எங்களிட்டையும் புதைகுழியள் இருக்கு. அதுகளையும் தோண்டவேணும்' எண்டு அடம் பிடிச்சவை. ஏனெண்டால், அவையளுக்கு தமிழாக்களுக்கு ஏதும் நல்லது நடந்தால் புகைச்சல் வந்திடும். முந்தி அரசாங்கத்துக்கும் புலியளுக்கும் சமாதானப் பேச்சு வார்த்தை வரேக்க, இடைக்குள்ள தாங்களும் புகுந்து 'எங்களையும் இதுக்க சேர்க்கோணும்' எண்டு வந்து எல்லாத்தையும் குழப்பினதும் இவையள் தான். அப்பிடி செம்மணியில ஆமியால சனங்கள் கொல்லப்பட்ட வீரியத்தை குறைக்கிறதுக்காக, 'புலியளால கொல்லப்பட்டவையின்ர புதைகுழியும் இருக்கு' எண்டு காட்டுறதுதான் அவையின்ர பிளான்.

அதுக்காகத்தான் அவையள் இப்ப கிழக்கில குருக்கள் மடம் எண்ட இடத்தில தங்கட ஆக்கள் 170 பேரை இயக்கம் சாக்கொண்டு, கிடங்கு வெட்டி தாட்டதெண்டும் அதைத் தோண்டினால் எலும்புக் கூடுகள் வருமெண்டும் சொன்னவை. நீதிமன்றமும் அதைத் தோண்டுறதுக்கு ஓமெண்டு சொல்ல, இப்ப மூண்டு நாளா அந்த இடத்தில தோண்டிப் பார்த்தவை. வெட்ட வெட்ட மண்ணும் கல்லும் தான் வந்துகொண்டிருக்கே தவிர ஒரு எலும்பு கூட வரேலையாம். அதில புதைகுழி இல்லையெண்டு மூடிப் போட்டினம். புலியளும் புதைகுழியளை உருவாக்கினவை எண்டு செம்மணி விசயத்தை அமுக்கி அரசியல் செய்ய வெளிக்கிட்டவை, இப்ப தங்கட முகத்தில தாங்களே கரியைப்பூசிக்கொண்டு நிக்கினமாம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி



# வாணி ரெக்ஸ்

எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய தெரிவுகளுடன் அனைத்து விதமான ஆடைகளையும் பெற்றுக்கொள்ளலாம்..

சித்திரைப் புத்தாண்டு இம்முறை உங்களுடன்..

01.04.2026 முதல் 15.04.2026 வரை

10% வீதம் முதல் 30% வீத அதிவிசேட விலைக்கழிவில் மனதிற்கு பிடித்த Trending ஆடைகள்

பெண்களுக்கான சாறி, சல்வார்கள், லெகங்கா, பட்டுப்பாவாடைகள், ரொப், பாட்டி கவுண், மொடன் சட்டைகள்.

சிறுவர்களுக்கான அனைத்து ஆடை வகைகளும்

ஆண்களுக்கான அனைத்து ஆடை வகைகளும்

இல.81, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

021 22 5578 / 0777 488 093

---

ஓம் சிவசக்தி துணை
சிவசக்தி மயம்







## யாழ்ப்பாணம் அரியாலை பொன்னம்பலம் சந்தி அருள்மிகு ஶ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

## புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பண ஏககுண்டபக்ஷ

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் – 2026

திருச்சிற்றம்பலம்

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூ நிரத்தாளை, புவி அடங்கக்
காத்தாளை, அங்கையில் பாசாங்குசமும் கரும்பும் கில்லும்
சேர்த்தாளை, முக்கண்ணியைத், தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.

மஹாகும்பாபிஷேகம் "பக்தி தரிசனம்" வலைத்தளங்களில் நேரலையாக ஒளிபரப்புச் செய்யப்படும்.

LIVE

**எண்ணெய்க்காப்பு**
04.04.2026 சனிக்கிழமை
காலை 9.00 - மாலை 4.00 மணி வரை

**மஹா கும்பாபிஷேகம்**
05.04.2026 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 - 10.00 மணி வரை

இங்ஙனம்
ஆலய தர்மகர்த்தா மற்றும் அடியார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# சட்டமும் கடைப்பிடிப்பும்

சிறந்த சட்டங்களால் மட்டும் ஒருநாடு நேர்த்தியாகவும் வளமாகவும் இருந்துவிட முடியாது. சட்டங்கள் எவ்வளவுக்கு முக்கியமானவையோ அவ்வளவுக்கு சட்ட அமுலாக்கமும் முக்கியமானது. குறிப்பாக, நெருக்கடியான தருணங்களை எதிர்கொள்ளும்போது, ஊனும் உயிரும்போன்று இவ்விரு துறைகளும் இணைந்து செயற்படும் பட்சத்தில்தான், சவால்களை எதிர்கொள்ளவும் வெற்றிபெறவும் முடியும். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை சட்டவாக்கம் ஒருகோணத்திலும், சட்ட அமுலாக்கம் மறுகோணத்திலுமாக மிக அலங்கோலமாகவே செயற்படுகின்றன. இந்த நீண்டகால சபிக்கப்பட்ட போக்கின் மற்றொரு அம்சம்தான் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் மற்றும் மின்சக்தி நெருக்கடிகள்.

மத்திய கிழக்குப் போரால் இன்று உலகம் முழுவதும் எரிபொருள் நெருக்கடிகள் தோன்றியுள்ளன. அவுஸ்திரேலியா முதல் ஆபிரிக்கா வரை இது நெருக்கடிகளின் யுகம். எரிபொருள் நெருக்கடிகள் காரணமாக கியூபா, பிலிப்பைன்ஸ் நாடுகள் முற்றாக முடங்கியுள்ளன. அத்தகைய நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, ஸ்ரீலங்கா அரசாங்கம் சில கொள்கைகளை வகுத்தது. புதன் கிழமைகளில் விடுமுறை, அரச அலுவலகங்களில் மின்பாவனைக்குக் கட்டுப்பாடு, வணிக நிறுவனங்களில் மின்பாவனைக்கான வரையறை, கியூ.ஆர். குறியீடு என்று பல குறிப்பிடப்பட்ட விடயங்கள் இதில் உள்ளன. ஆனால், அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேறியதா? அதன் கட்டளைகளும் உத்தரவும் உரிய முறையில் பின்பற்றப்படுகின்றதா? என்று கேட்டால் அதற்கான பதில் நிச்சயம் எதிர்மறையாகவே அமையும்.

இரவுநேரங்களில் இலத்திரனியல் விளம்பரப் பலகைகளைக் காட்சிப்படுத்த வேண்டாம் என்று அரசாங்கம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளபோதிலும், நாடெங்கும் மிகச் சாதாரணமாக விதிமீறலை அவதானிக்கமுடிகின்றது. தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து எரிபொருள்களை மீதப்படுத்துமாறு அரசாங்கம் கோருகின்றது. பொதுப்போக்குவரத்து இதற்கொரு சிறந்த தீர்வாக இருக்கமுடியும். ஆனால், வீதிகள் வழக்கம்போல வாகனங்களால் நிறைந்தே உள்ளன. நெருக்கடிக்கு முன், நெருக்கடிக்குப் பின் என எந்த மாற்றத்தையும் பிரதான வீதிகளில் அவதானிக்கமுடியவில்லை. வீடுகளின் மின்பாவனை தொடக்கம், தனியார் அலுவலகங்களின் மின்சாரப் பாவனைவரை அனைத்திலும் இதே கதைதான். களநிலைமை இவ்வாறிருக்கையில், தற்போதைய கடினமான காலத்தை நாம் எவ்வாறு கடப்பது? எவ்வாறு நெருக்கடியை எதிர்கொள்வது?

மத்திய கிழக்குப் போர் மட்டுமல்ல, மக்களின் செயற்பாடுகளும் நெருக்கடிகளை அதிகரிக்கின்றன. அரசாங்கத்தின் திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி முன்னின்று செயற்பட வேண்டிய மக்கள், அரசுக்கு சுமையேற்றுகின்றனர் என்பதே அப்பட்டமான உண்மை. எரிபொருள்களைச் சேமித்து வைப்பதில் இருந்த வேகம் அவற்றைச் சிக்கனப்படுத்துவதிலும், மின்சக்தியை மீதப்படுத்துவதிலும் இருந்தால், உலகளாவிய நெருக்கடிக்கு எதிரான எமது கூட்டணிப் போராட்டம் நிச்சயம் வெற்றிபெறும் என்பது திண்ணம்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குநழ்யும் விருந்து**

**பொருள்:** அனிச்சப்பூ மோந்தவுடன் வாடிவிடும்; அதுபோல் முகம் மலராமல் வேறுபட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பர்.




### பொருளாதார மீட்சிக்கு

# இலங்கை உலக வங்கி ஐந்தாண்டு ஒப்பந்தம்!

**கொழும்பு, ஏப். 4**
**இலங்கையின் பொருளாதார மீட்சியை வலுப்படுத்தவும், நடுத்தரக் காலத்தில் 7வீதம் பொருளாதார வளர்ச்சியை எட்டவும் உலக வங்கி குழுமமும் இலங்கை அரசாங்கமும் இணைந்து புதிய ஐந்தாண்டு கூட்டாண்மை ஒப்பந்தத்தில் கைச்சாட்டுள்ளன.**

இந்தப் புதிய கூட்டாண்மையின் மையமாக தனியார் துறை சார்ந்த வேலைவாய்ப்பு உருவாக்கம் காணப்படுகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமான நேரடி மற்றும் திரட்டப்பட்ட முதலீடுகள் சர்வதேச நிதி நிறுவனம் வழங்கவுள்ளது.
அத்துடன் அடுத்த 3 ஆண்டுகளில் ஒரு பில்லியன் டொலர் வரையிலான குறைந்த வட்டிக்கடன் வசதியை உலக வங்கி வழங்கவுள்ளது. அரச ஒழுங்குமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் டிஜிற்றல் மயமாக்கல்மூலம் 2030ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருமானத்தை 36 பில்லியன் டொலராக உயர்த்த இந்தக் கூட்டாண்மை ஊடாக திட்டமிடப்பட்டுள்ளது.
கொழும்புத் துறைமுகத்தின் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் 2030க்குள் இலங்கையின் மின்சாரத்தேவையில் 70 வீதத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலம் பெறுதல் என்பவற்றின் மூலம் மின்சாரக் கட்டணங்களைக் குறைக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளது. 100 மில்லியன்டொலர் முதலீட்டில்வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுற்றுலாமற்றும்மீன்பிடித்துறையை மேம்படுத்தும் இத்திட்டம் யாழ்ப்பாணம், பாசிக்குடா, திருகோணமலை மற்றும் அருகம்பே ஆகிய பகுதிகளை மையமாகக் கொண்டது.
இந்தத் திட்டம் 2031ஆம் ஆண்டளவில் 3,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

## கபிலவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப். 4
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவை எதிர்வரும் ஏப்ரல் 17ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
எயார்பஸ் விமானம் கொடுக்கல் வாங்கலில் இடம்பெற்ற இலஞ்சம் தொடர்பான விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கபிலசந்திரசேனவின் பிணை மனுவை நீதிமன்றம் நிராகரித்து, அவரது விளக்கமறியலை நீட்டித்துள்ளது. (ச-இ)



## இணையமூடான நிதிமோசடி 147 வெளிநாட்டவர்கள் கைது

கொழும்பு, ஏப். 4
சிலாபம் - இரணவில பகுதியில் இணையம் ஊடாக நிதிமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 147 வெளிநாட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விருந்தகம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கைதானவர்களில் சீனா, மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## 2,000 லீற்றர் டீசலுடன் இருவர் சிக்கினர்

கொழும்பு, ஏப். 4
தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி பெருமளவிலான டீசலை வைத்திருந்த இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
தம்பலகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இரண்டு வெவ்வேறு இடங்களில் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டபோது சந்தேகநபர்கள் கைதாகினர். (ச-இ)

## சிறைத்திணைக்களத்துக்குப் புதிய பதில் ஆணையாளர்

கொழும்பு, ஏப். 4
சிறைச்சாலைகள் திணைக்களதின் புதிய பதில் ஆணையாளர் நாயகமாக பிரசாத் ஹேமந்த குமார நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் இவர் மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமாகப் பணியாற்றியுள்ளார். (ச-இ)

**நாளை** ஞாயிற்றுக்கிழமை - பங்குனி 16
05.04.2026
சுபநேரம் : 09.09 - 10.39
ராகுகாலம் : 04.39 - 06.09


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



### தேசிய கால்பந்துத் தொடர்

# இறுதிப்போட்டியில் இன்று யாழ். புனித மேரிஸ்

**கொழும்பு, ஏப். 4**

**இலங்கை கால்பந்து சம்மேளனம் நடத்தும் பிரதான கால்பந்துத் தொடரின் மாபெரும் இறுதிப் போட்டி இன்று மாலை 6 மணிக்கு கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் நடைபெறவுள்ள நிலையில், அதில் வடக்கு மாகாணத்திலிருந்து யாழ். புனித மேரிஸ் கால்பந்து அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது. இந்தப் போட்டியில் வடக்கு மாகாணத்தின் யாழ். புனித் மேரிஸ் அணியும் கொழும்பு சௌந்தர்ஸ் அணியும் மகுடத்துக்காக மோதவுள்ளன.**

2022ஆம் ஆண்டு சம்பியன்ஸ் லீக் தொடருக்குத் தரம் உயர்த்தப்பட்டதிலிருந்து, இலங்கையின் உயர்மட்ட கால்பந்துத் தொடரில் விளையாடும் யாழ்ப்பாணத்தின் ஒரே ஒரு கழகமாக புனித மேரிஸ் அணி திகழ்கிறது.

பலம் வாய்ந்த ஜாவாலேன் அணிக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் 1:1 என சமநிலை வகித்தநிலையில், பெனால்டி உதைகள் மூலம் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குள் புனித மேரிஸ் அணி நுழைந்துள்ளது.

அணியின் தலைவர் எம். நிதர்ஷன் 10 ஆவது நிமிடத்திலேயே கோல் அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார்.

இதேவேளை இலங்கை கால்பந்து வரலாற்றில் பலமுறை தேசிய பட்டங்களை வென்றுள்ள சௌந்தர்ஸ் அணியுடன் மோதும் இன்றைய போட்டி சவாலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-க)

## அலங்கார உற்சவம்

கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கை வேம்படி சித்தி விநாயகர் ஆலயத்தில் அலங்கார உற்சவம் கடந்த மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. இன்று சனிக்கிழமை 108 சங்காபிஷேகப் பெருவிழா இடம்பெற்று, மாலை 7 மணிக்கு சுவாமி கிராம பிரதட்சணமாக வலம் வருவார். இதன்போது தெய்வீகப்பேருரை வர்ணணையை மதுர கவி காரை.எம்.பி. அருளானந்தம் நிகழ்த்துவார். (க)

Best Wishes

# மணிவிழா வாழ்த்துகள்

Best Wishes



## திருமதி புஸ்பராணி சுகுமார்

**சேவை விபரம்**

- யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாசாலை - 27.03.1990 - 10.02.2010
- யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் - 11.02.2010 - 28.02.2021
- யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் - 01.03.2021 - 03.04.2026

ஆரம்பக் கல்விக்கு ஆணி வேராயிருந்து
ஆழமான கல்வியை அமுதமாய்ப் போதித்து
அறிவுச் சுடரினை மாணவருக்கு ஏற்றி
அறிவியல் உலகில் மாணவரை பிரகாசிக்கச் செய்த
ஆசான் புஸ்பராணி சுகுமார் வாழீ வாழீ

மழலைகளுக்கு ஏற்ற வகையில்
மாண்பு மிக்க கல்வியை
மாணவரின் அறிவுக்கு ஏற்ற வகையில் கற்பித்தும்
மகிழ்வான வார்த்தை பேசி பொறுமையுடன் கற்பித்து
மாணவர் உணர்வுப் பொறுமையும்
மாணவர் அடைவுமட்டக் கோவைக்கு வகை கூறியும்
ஆசிரியர் நலனில் அக்கறையுடன் செயற்பட்டு
ஆசிரியர் சம்பள விபரப் பதிவுகளை மேற்கொண்ட
ஆசிரியர் புஸ்பராணி அன்னை வாழீ வாழீ

புலமைப் பரிசில் பரீட்சைக்கு
புதுப் புது விடயங்களை புரியவைத்து
புத்திசாலித்தனமாக மாணவர்
புரிந்து கொள்ளும் வகையில் கற்பித்து
புலமைப் பரிசில் பரீட்சையில்
புள்ளிகள் பெற்று பல மாணவர்கள் சித்தியடைச் செய்து
2023 ல் 8 மாணவர்களை சித்தியடையச் செய்து
வரலாற்று சாதனை படைத்த
**புஸ்பராணி ஆசான்** என்றும் வாழீ வாழீ.




**வாழ்த்துவோர்:**

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.**
**யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்**

(cs.61125) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2025 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

## மன்னார் டிலாசால் கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானம்**
ஜேக்கப் ஜெமிமா 2ஏபி, மரியதாசன் மயூரன் துரம் ஏபிசி, இருதயராஜா கிறிஸ்ரபெல் குரூஸ் 2பிசி,

**பௌதீகவியல் விஞ்ஞானம்(கணிதம்)**
லோரன்சிப்பிள்ளை கிறிஸ்ரன் கெவின் ஏபிசி, கிருஷ்ணசாமி வினுயன் 3சி, கிறிஸ்தோத்திரம் எவோன் லக்சிகா 2சிஎஸ்,

**கலைப்பிரிவு**
சிவபாலன் தனுசினி 3ஏ, கிறிஸ்துராஜன் கிறிஸ்ரின் டிறோஜினி 3ஏ, சந்தியோகு கிறிஸ்ரினல் லியோன் 3ஏ, பேதுரு யதுசி 3ஏ, மகேந்திரம் ஜென்சி 3ஏ, கிருஷ்ணகுமார் மேரி ஜஸ்டினா 2ஏபி, அனிஸ்ரன் அனுசியா 2ஏபி, குயின்ரஸ் றோஸ்னி 2ஏபி,

**வர்த்தகப்பிரிவு**
லோரன்சிப்பிள்ளை அன்ரன் பிரியன் 3ஏ, சகாயாராசா மேரி அம்சிகா 2ஏபி, நோயல் ஸ்ரீபனஸ் கிறிஸ்ற் மேரிலக்சன் 2ஏபி, விஜயபாகு துசாந்தினி ஏ2பி, கிறிஸ்ரி செபமாலை வினித்தா 2ஏபி, அன்ரன் நெஜான் மியூரியல் சயானி ஏ2பி, இம்மானுவேல் பிள்ளை டேமியன் 2பிஏ, முனீஸ்வரன் கோபி 2ஏசி, ரமணகுமார் சுஷ்மிதன் 2பிஏ,ராசாஸ்ரீ சோகுலன் ஏபிசி, யூஜின் யோசப் ஆன் அஸ்வினி ஏபிசி, வில்வராசா திசாயினி ஏ2சி,

## வவுனியா தமிழ் ம.ம.வித்தி 4 மாணவர்கள் சிறப்புச் சித்தி

யாழ்ப்பாணம், ஏப். 4
வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய 4 மாணவர்கள் வெளியாகியுள்ள உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் அகில இலங்கை ரீதியில் சிறப்புச் (மெறிற்) சித்திகளைப் பெற்றுள்ளனர்.
அத்துடன் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த 7 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.
5 மாணவர்கள் 2ஏபி சித்திகளையும் 5 மாணவர்கள் ஏ2பி சித்திகளையும் பெற்றுள்ளனர். (ச-110)

## மன்.எருக்கலம்பிட்டி மகளிர் மகாவித்தியாலயம்

ஹனீஸ் ஆதிலா 3ஏ, நூன் பாத்திமா நப்லா 2ஏபி, அப்துல் முத்தலிவ் முப்லிஹா 2ஏபி, ரூஹூல் அமீன் முஸாரிபா முனாஸா 2ஏபி, யஹ்யா பாத்திமா ஸஜிதா ஏ2பி, ஸேகு முனாஜித் முனா ஏ2பி, ஸலாஹுத்தீன் பாத்திமா ஸபா ஏ2பி, முஹம்மது தல்ஹா பாத்திமா ஸஹ்லா ஏ2பி, முஹம்மது இம்தியாஸ் முஸ்ரிபா ஏபிசி,அப்துல் ரசூல் பாத்திமா ஹிக்மா ஏபிசி

## மன்னார் புனித ஆனாள் கல்லூரி

**இயற்பியல் அறிவியல் பிரிவு**
என்.றோய் திசான் குரூஸ் ஏ2பி, ஜே.மேரி பவுஸ்ரினா குரூஸ் ஏ2பி, ஆர்.றொசைர்றா மார்க் பி2சி, இ.ருஹாமா சி2எஸ், எம்.சி.ஜோசுவா மார்க் சி2எஸ்,

**உயிரியல் பிரிவு**
ஆர்.றொசைர்றா மார்க் பி2சி,கே.ஸ்டெப்னி டலிமா 2பிசி, எப்.கோல்ட்சன் பி2சி, எஸ்.மேரி ஏஞ்சலின் குரூஸ் சி2எஸ்,

**தொழில்நுட்பப் பிரிவு**
டி.ஆன் கெசியா குரூஸ் பி2சி, எஸ்.ஜேசு ரெக்ஸ் வாஸ் 3சி, எம்.ஜே.பி.ராய்டன் லாம் பேர்ட் 3சி, ஏ.ஜுட் கிறிஸ்ட் அபிஷேக் சோசாய் 3எஸ், ஜே.பி.அபிஷேக் 3எஸ்,

**கலைப்பிரிவு**
எப்.எக்ஸ். ஆன் பிபாஷா 2ஏபி



க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்ட ரீதியில் வர்த்தகப்பிரிவில் மூன்றாம் இடத்தைப்பெற்ற பூநகரி கிராஞ்சி மாணவனை, நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், நேரில் சந்தித்துப் பாராட்டுத் தெரிவித்தார். (க-17)




2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் கணிதப்பிரிவில், தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற கிளிநொச்சி மாவட்ட மாணவன், தெய்வேந்திரம் திருக்குமரனை, இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் நேரில் சந்தித்து தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். (க-66)



2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் கணிதப்பிரிவில், தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற, கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன் தெ. திருக்குமரனை, வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் நேரில் சந்தித்துப் பாராட்டிக் கௌரவித்தனர். (க-66)






## டித்வாவினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு

கிளிநொச்சி,ஏப்.4
டித்வா புயலால் படகு மற்றும் வலைகளை இழந்த கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த நன்னீர் மீன்பிடி மீனவர்களுக்கு நேற்றுமுன்தினம் இழப்பீடு வழங்கப்பட்டது.
தேசிய உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாண பணிப்பாளர் பி.நிருபராஜ் தலைமையில், கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்[illegible] மீனவர்களுக்கான காசோலைகளை வழங்கினார். (க-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் மணவாளக் கோலத் திருவிழா கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்றது. (க-66)







## விடுதலை விதை கல்லறைக்குள் உறங்குமா?

கல்லறைகள் வாழ்வின் முடிவிடங்கள் அல்ல. முடிவில்லா விண்ணக வாழ்வின் பிறப்பிடங்கள். உலகில் உள்ள கல்லறைக் கல்வெட்டுகள் அனைத்தும் 'இங்கே இன்னார் உறங்குகின்றார்' என்று உரைத்து நிற்க ஒரே ஒரு கல்லறையில் மட்டும் வானதூதர் கூறியது

"அவர்( இயேசு) இங்கே இல்லை " மத் 28 6)

அப்படியெனில் அவர் எங்கே? எம்மில் எமக்குள்ளே இருக்கிறார். பாஸ்கா திருவிழிப்பில் மந்திரிக்கும் புதிய நெருப்பு, புதிய ஒளி, புதிய நீர் போன்ற அடையாளங்கள் பழையன கடந்து புதியன படைக்க எம்மை அழைக்கின்றன. நள்ளிரவில் புதிய ஒளி தோன்றியது. இருளே இந்த உலகின் இறுதி இலக்காக அமைந்துவிடுமோ என்ற அச்சத்தில் இருந்தவர்களுக்கு இயேசு எனும் ஒளி பூபாளமாக உயிர்ப்பூட்டியது. இயேசுவின் மறைவால் இருண்டு போன மரியாவின் உள்ளம் அவரது உயிர்ப்பால் ஒளிபெற்றது. பிறரையும் இயேசுவின் ஒளியை நோக்கி அழைத்துச்சென்றார். கிறிஸ்துவின் உயிர்ப்பின் ஒளியில் பங்கேற்கும் நாம் ஒளி வாழ்வைப் பெற்றுப் பிறருக்கு ஒளியாக மாறவேண்டும். நம்பிக்கை இழந்து வாடும் மக்களுக்கு நாம் நம்பிக்கையின் ஒளியாக வழிகாட்டவேண்டும். இயேசு இறந்துவிட்டார் என்று கல்லறையில் அவரைத் தேடாமல் அவர் உயிர்த்து விட்டார் என்று மனிதர்களில் அவரைத் தேடுவோம்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை



கோப்பாய் மத்தி காளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா, இம்முறை புதிய சித்திரத்தேரில் இடம்பெற்றது. (க-17)

## யோகா கற்கைநெறி புதிய பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 4

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகாக்கலைக் கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. சனி, ஞாயிறு தினங்களிலும், அரச விடுமுறை தினங்களிலும் காலை 6மணிமுதல் காலை 8 மணி வரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ளமுடியும். சுமார் மூன்று மாதகாலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ச-இ)

### வடக்கு மாகாண

## வருமானப் பரிசோதகர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், ஏப். 4

இலங்கை வருமானப் பரிசோதகர்கள் சங்கத்தின் வடக்கு மாகாண அமைப்பின் ஆண்டுப் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் யாழிலுள்ள தனியார் விடுதியொன்றில் அண்மையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகத்தெரிவில் தலைவராக மீண்டும் தேவராஜா றெனோ தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் செயலாளர், பொருளாளர் உட்பட 15 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து எதிர்காலப் பயணம் தொடர்பான கலந்துரையாடல்களுடன் ஆண்டுப் பொதுக் கூட்டம் நிறைவுற்றது. (ச-இ)



## தெய்வீகப்பேருரை

யாழ்ப்பாணம், ஏப். 4

தென்மராட்சி கோவிலாக்கண்டி ஸ்ரீ சிதம்பர சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேப் பெருஞ்சாந்தி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை மணி முதல் 10.30 மணிவரை இடம்பெறும். விழாவில் கும்பாபிஷேகத்துவம் எனும் விடயத்தில் தெய்வீகப்பேருரையை மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தம் நிகழ்த்துவார். (க)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** அதிகாரிகளின் சந்திப்பும், அவர்களால் காரியஅனுகூலமும்உண்டாகும். தாயிடம்எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நீண்டநாளாக எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். முக்கியமான பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று கிடைக்க வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளநேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**விருச்சிகம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளை யோசித்து எடுப்பது நல்லது. கடன்கள் விஷயத்தில் சற்று [illegible] இருக்கவும்.

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சிறு தடை ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** வழக்கமான பணிகளில் மட்டும் ஈடுபடவும். தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கும்பம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும்.

**மீனம்:** பிற்பகலுக்குமேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் பிரச்சினை ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகள் உதவிகேட்டு வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம் திருமண சேவையில் சகல இனம், மதம், தொழில், அரசசேவை, உள்நாடு, வெளிநாடு, சுயதொழில் புரியும் எல்லா மணமக்களுக்குமான வரன்கள் எம்மிடம் உண்டு.

தொடர்புகளுக்கு:- வி.ஜெயந்தி
**077 973 3183**

## விற்பனைக்கு

ஈஸ்டரை முன்னிட்டு 1 Kg
**புறோயிலர் - 1300/- பேரன்ஸ் - 1400/-**
அத்துடன் கல்பேட், ஊர்ச்சேவல் என்பன விற்பனைக்கு உண்டு.
தாசன் பாம்
158/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(CS61131) J-1
தொடர்புகளுக்கு:- **077 312 7498**

## காணி விற்பனைக்கு

**கோண்டாவிலில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

தொடர்பு: **077 342 7132**
**071 826 0761**

(cs 61336) N-1


## பத்தொன்பதாம் மற்றும் இரண்டாம் ஆண்டில் உங்கள் நினைவுகளைச் சுமந்து




**சூசைப்பிள்ளை வேதநாயகம்** — **வேதநாயகம் யேசுராணி**

**02.02.2007 விண்ணில் 04.04.2024**

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்
நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான
சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலி 1:21:3:21)

பாசமும் அன்பும் நிறைந்த அப்பா, அம்மா
பாரினில் உங்கள் நேசக்கரங்கொண்டு அணைத்து
அறிவூட்டி, உணவூட்டி எம்மை வாழ வைத்தீர்கள்.
உங்கள் உதிரத்தை எமக்கான உரமாக்கினீர்கள்
நாம் சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும் என
மனப்பூர்வமாக எண்ணினீர்கள்
பிள்ளைகள் எம்மைக் குறித்த அன்புப் பரிதவிப்பும் ஏக்கமும்
நீங்கள் கொண்டிருந்ததை இன்றும் நாம் எண்ணுகிறோம்
நற்பெற்றோராய் உங்களுக்காக வாழாமல் எமக்காக
வாழ்ந்தீர்கள், உங்கள் தியாக நேசத்தை எமக்குப் பொழிந்தீர்கள்...



**அப்பா, அம்மா என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

**இல 35, மாட்டீன் லேன், யாழ்ப்பாணம்.**
**04.04.2026**

(CS 31564) A

# மரண அறிவித்தல்



## பூதத்தம்பி வேல்முருகன் (செட்டியார்)

யாழ் சிறுப்பிட்டி தெற்கு செல்லப்பிள்ளையார் வீதியை பிறப்பிடமாகவும் சுவிஸ் காசிஸ் (cazis) மற்றும் யாழ்ப்பாணம் இருபாலைசந்தி, கோண்டாவில் வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பூதத்தம்பி வேல்முருகன் (செட்டியார்) அவர்கள் கடந்த (31.03.2026) செவ்வாய்க் கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி - லட்சுமிபிள்ளை தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசாமி - தவமணி தம்பதியினரின் அருமை மருமகனும், ரமணி அவர்களின் அன்பு கணவரும், மயில்வாகனம் (முன்னாள் பொறியியலாளர் சிங்கப்பூர்), விஜயலட்சுமி, கணேசலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற வேதநாயகி, மற்றும் அருணாசலம் – அருண் (பொறியியலாளர் லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2026) ஞாயிற்றுக்கிழமை அவரது இருபாலை இல்லத்தில் காலை 07.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிளவில் சிறுப்பிட்டி காலயன் மண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தோற்றம்** 13.11.1958 — **மறைவு** 31.03.2026

இருபாலை சந்தி,
கோண்டாவில் வீதி,
இருபாலை.

தகவல் : குடும்பத்தினர்
விக்கி - 0776158872 (மருமகன்)
ரமணி - 0743829057 (மனைவி)

(CS31561) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அதிபரை நியமிக்கக் கோரி மூங்கிலாற்றில் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, ஏப்.4

புதுக்குடியிருப்பு மூங்கிலாறு ஆரம்பப் பாடசாலைக்கு உடனடியாக அதிபரை நியமிக்கக்கோரி, பெற்றோர் கடந்த செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஆண்டு இறுதியில் பாடசாலையின் அதிபர் இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில், இதுவரை புதிய அதிபர் எவரும் நியமிக்கப்படவில்லை. 153 மாணவர்கள் கல்வி கற்று வரும் குறித்த பாடசாலையில் வளப்பற்றாக்குறைகள் உள்ள போதும், அதிபர், ஆசிரியர்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறித்த பாடசாலைக்கு அதிபர் மற்றும் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-19)


## நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.4

பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடத்தொகுதியின் முதல் தளத்தில் உள்ள வர்த்தகர் சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

சங்கத்தலைவர் இ.ராஜேஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிர்வாக நடைமுறைகளைத் தொடர்ந்து பிரதம விருந்தினராக பங்கேற்ற பருத்தித்துறை நகர பிதா வி.டக்ளஸ் போல் தற்காலிகத் தலைவராகச் செயற்பட்டு புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது.

இரா.மயூதரன் தலைவராகவும், ஸ்ரீ பிரகாஸ் செயலாளராகவும், த.ஆதித்தன் பொருளாளராகவும், உபதலைவர், உபசெயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-41-100)





# பெண்களுக்கு நீதிகோரி நல்லூரில் போராட்டம்

பாதிக்கப்படும் பெண்களுக்கு நீதிகோரி ஈழத்தமிழர் மகளிர் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மேம்பாட்டுக்கான அமைப்பின் ஏற்பாட்டில், நல்லூர் பின் வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இன அழிப்பை விசாரிக்கும் சர்வதேச நீதி இன்றி ஈழத்தமிழர்களுக்கு அர்த்தமுள்ள பாதுகாப்பே இல்லை, தொடரும் இன அழிப்பு நிகழ்ச்சிநிரலை எதிர்ப்போம், உரிமைக்காகவும், பாதுகாப்புக்காகவும் குரல் கொடுப்போம் உள்ளிட்ட கருப்பொருள்களில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பு இல்லையா?, தமிழ்ப் பெண்களுக்கும் தமிழ் மண்ணுக்கும் விடுதலை வேண்டும், எமது நிலம் எமக்கு வேண்டும், மறக்கவும் மாட்டோம் மன்னிக்கவும் மாட்டோம், வேண்டும் வேண்டும் சர்வதேச நீதி வேண்டும், இராணுவத்தினரை உடனே வெளியேற்று போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன. வாசகங்கள் எழுதப் பட்ட பாதகைகளையும் தாங்கியிருந்தனர். (க-20)



# தருமபுரம் ம.கல்லூரியின் புதிய அதிபருக்கு வரவேற்பு

கிளிநொச்சி, ஏப்.4

தருமபுரம் மத்திய கல்லூரியின் புதிய அதிபரை வரவேற்கும் நிகழ்வு கடந்தவாரம் இடம்பெற்றது. கல்லூரியின் புதிய அதிபராக, தருமபுரம் இலக்கம் 1 அ.த.க. பாடசாலையில் இதுவரை காலமும் அதிபராகக் கடமை ஆற்றிய பரமலிங்கம் தவனேசன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றார். (க-18)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 . 01 . 1959 | 28 . 03 . 2026 |

## திருமதி இராஜலக்சுமி சந்திரசேகரம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடம், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலக்சுமி சந்திரசேகரம் கடந்த (28.03.2026) சனிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சந்திரசேகரம் அவர்களின் பாசமிகு மனைவியும், கீர்த்திகரன், நிந்துஜா ஆகியோரின் ஆருயிர் தாயாரும், பிரைனா, பன்னீர்தாசன் ஆகியோரின் மாமியாரும், சந்தோஷ், கௌசிக், விகான், லயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.04.2026 புதன்கிழமை அன்று கொழும்பில் இடம்பெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31493) A

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 . 10 . 1932 | 17 . 03 . 2025 |

அமரர்

## திருமதி R.M. தியாகராஜா தங்கரத்தினம்

நீங்கள் எங்களை பிரிந்து விண்ணுலகம் சென்று ஒரு வருடம் ஆனது அம்மா ஆனால் உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் என்றும் உயிரோடு வாழ்கின்றது.

அன்பும் அரவணைப்பும் தியாகமும் நிறைந்த உங்கள் வாழ்க்கை எங்களுக்கு ஒரு வழிகாட்டியாக உள்ளது. நீங்கள் கற்றுத்தந்த மதிப்பு மிக்க பண்புகள் எங்கள் வாழ்வில் என்றும் நிலைத்திருக்கும்.

நாங்கள் உங்களை இழந்த வேதனை இன்னும் மாறவில்லை. ஆனால் நீங்கள் எப்போதும் எங்களுடன் இருப்பதாக உணர்கிறோம். உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இரட்ணமகால்
சித்தன்கேணி
077 069 0261

என்றும் நினைவில் உங்கள்
R.M.தியாகராஜா
குடும்பத்தினர்

(cr.47339) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.4

நாச்சியமார் கோவிலடி ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் வெப்பக்காலநிலை விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வண்ணை ஸ்ரீ காமாட்சி திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா, பிரதேச மருத்துவ அதிகாரி மருத்துவக் கலாநிதி த.துஷியந்தன் ஆகியோர் கருத்துரைகளை ஆற்றுவர். (க)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 4

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் உடனுறை நகுலாம்பிகாதேவியின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 12 தினங்கள் அலங்கார உற்சவம் இடம்பெறும். அலங்கார உற்சவக் காலங்களில் தினமும் காலை 7.30 மணியளவில் அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து நகுலாம்பிகாதேவிக்குச் சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம்பெறும். வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி உலா வருவார். (ச-66)

## வடக்கில்...

திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத் துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று இடியுடனான மழைக்குச் சாத்தியங்கள் உள்ளன. குறிப்பாக, மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், திருகோணமலை, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இடியுடனான காலநிலைக்குக் கூடுதலான வாய்ப்புக் காணப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (அ-ம)

## பிள்ளையானுக்கு...

இந்தத் தீர்ப்புக்கு எதிராக விரைவில் மேன்முறையீடு செய்யவுள்ளோம்- இவ்வாறு முன்னாள் அமைச்சர் கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பிள்ளையான் கல்கிசை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, பொலிஸ்மா அதிபரின் பரிந்துரைகள் கிடைக்கும் வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் பிள்ளையானை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி அநுரவும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் தெரிவித்துவந்த நிலையில், அவர்களின் கருத்துகள் பொய்யானவை என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது. உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் எவ்வித குற்றச்சாட்டுகளும் பிள்ளையான் மீது சுமத்தப்படவில்லை. அதேபோல் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரத்தில் பிள்ளையானை கைதுசெய்ய முடியாது. ஆகவே அவரை விடுதலை செய்யுமாறு நாங்கள் நீதிமன்றத்தில் வலியுறுத்தினோம்.

பிள்ளையான் சார்பில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகளை கோரும் வரையில் பிள்ளையானை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. கல்கிசை நீதிமன்றம் வழங்கிய உத்தரவை ஏற்க முடியாது. இந்த உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவேன். விடுதலைப்புலிகள் அமைப்பால் நடத்தப்பட்ட சித்திரவதை முகாம்களை பிள்ளையானின் பெயரில் சேர்ப்பதற்கு அரசாங்கம் சதி செய்கின்றது. இந்தச் சதியை முறியடிப்போம் - என்றார். (அ-ம)

## அரச...

ஒழுங்கமைக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் இன்று காலை நடைபெறவுள்ள நிலையில், பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதா இல்லையா என்பது தொடர்பில் இன்றைய நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் தொடக்கம் நேற்று வரை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஏற்கனவே போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## நம்பிக்கையில்லாப்...

என என்று, தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நிஹால் அபேசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஆளுங்கட்சியினர் இன்னமும் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவில்லை. இந்த விடயத்தில் தார்மீகப் பிரச்சினைகள் உள்ளன என்பதை நாங்கள் அறிவோம். எனவே, அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் - என்றார்.

வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில், இரண்டு விடயங்கள் பிரதானமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அண்மையில் தரமற்ற நிலக்கரி இறக்குமதி செய்த விவகாரத்தில் அவர் பொறுப்பேற்க வேண்டும். அத்துடன், உரக் கூட்டுத்தாபனத்தின் கொள்வனவு முகாமையாளராகப் பணியாற்றிய காலத்தில் இடம்பெற்ற தாகக் கூறப்படும் ஊழல் தொடர்பில், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அவர் அமைச்சராக இருப்பதற்கு தகுதியற்றவர் உள்ளிட்ட விடயங்களை முன்வைத்தே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ-ம)

## ஒரே...

ஸார் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். முன்னாள் இராணுவச் சிப்பாயான 35 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம)

## வடமராட்சி...

வடமராட்சி கிழக்குப் பகுதியில் அண்மைக்காலமாக யானைகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது. சுண்டிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நுழைந்த யானைக்கூட்டம் பெருமளவு தென்னைகள் மற்றும் பயன்தரு மரங்களை அழித்துள்ளது. வடமராட்சி கிழக்கில் கடந்த பல வருடங்களாக யானைத் தொல்லை இருக்கவில்லை. எனவே, தம்மை அங்கிருந்து வெளியேற்றும் நோக்கில் மேற்படி யானைகள் வெளியிடங்களில் இருந்து கொண்டுவந்து விடப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை, கடந்த மாதம் 19ஆம் திகதி வடமராட்சி கிழக்கின் கேவில், கட்டைக்காடு, நித்தியவெட்டை பகுதிகளுக்குள் நுழைந்த யானைகள் பெருமளவு சொத்தழிவுகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## பேராசிரியர்...

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் கைது செய்யப்பட்டு கடந்த ஒரு வருடமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிரான வழக்கு கல்கிசை நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, பிள்ளையானால் நடத்தப்பட்ட வதைமுகாமிலேயே பேராசிரியர் ரவீந்திரநாத் சித்திரவதைக்குப் பின்னர் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தி னர் குறிப்பிட்டுள்ளனர்.

நீதிமன்றத்தில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

சிவனேசதுரை சந்திரகாந்தன் என்ற இயற்பெயருடைய பிள்ளையான் எனும் இந்த சந்தேகநபர், செவனப்பிட்டிய பகுதியில் ஒரு சித்திரவதை முகாமை நடத்தி வந்துள்ளார். பொதுமக்கள், தொழிலதிபர்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் போன்ற பல்வேறு தரப்பினர் அந்த இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, கடுமையான சித்திரவதை, மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் கொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், பேராசிரியருமான ரவீந்திரநாத் அதே வதைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு, எரிக்கப்பட்டுள்ளார். பேராசிரியர் இந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டதாக இரண்டு சாட்சிகள் வாக்குமூலம் அளித்துள்ளனர். வேறு சிலரும் அங்கு படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு உடல்கள் அதே முகாமில் புதைக்கப்பட்டதாகவும் தற்போது ஆதாரம் கிடைத்துள்ளது.

இதுபோன்ற வதைமுகாமை நடத்துவதற்கு பிள்ளையானுக்கு எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை. அப்போதைய அரசியல் சூழ்நிலை காரணமாக, பாதுகாப்பு அமைச்சகம் இந்த சந்தேகநபருக்கு துப்பாக்கிகளை வழங்கியுள்ளது. அவற்றில் சில திருப்பித் தரப்படவில்லை என்றனர்.

சட்டமா அதிபரின் பரிந்துரை வரும் வரை பிள்ளையான் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தருமபுரத்தில்...

கனரக வானத்தின் மீது, பின்னால் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளது. மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உடற்கூற்றுப் பரிசோதனைக்குப் பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அம113)



பருத்தித்துறை நகரசபை ஆளுகைக்குட்பட்ட நான்காம் குறுக்கு வீதியின், வெள்ளவாய்க்காலைத் தூர்வாரும் பணி நகரசபையின் துப்பரவுப் பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்டது. (க-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# சொந்த மண்ணில் சென்னைக்கு அடி

## வெளுத்து வாங்கியது பஞ்சாப்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், பஞ்சாப்பிடம் சொந்த மண்ணில் படுதோல்வி அடைந்தது சென்னை சுப்பர் கிங்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை, சஞ்சு சாம்சன் நேற்றும் ஏமாற்றமளித்தார். எனினும், மாத்ரே, சிவம் துபே, சர்பராஸ் கான் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் அந்த அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் விஜயகுமார் வைசாக் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு ஆரம்ப வீரர்களே பலமான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். 11 பந்துகளில் 39 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழந்தார் பிரியான்ஸ் ஆர்யா. பிரப்சிம்ரன் சிங், கூப்பர் கனோலி, ஸ்ரேயஸ் என அனைத்து முன்வரிசை வீரர்களும் அற்புதமாக நிலைத்து நின்று விளையாடினார்கள். முடிவில் 8 பந்துகள் மீதமிருக்க 5 விக்கெட்டுக்களால் வென்றது பஞ்சாப். அதிகபட்சமாக ஸ்ரேயஸ் 50 ஓட்டங்களைப் பெற்றார். (ம)

**வேலையாட்கள் தேவை**

சாவகச்சேரியில் அமைந்துள்ள Hardware ஒன்றிற்கு Hardware அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. சாவகச்சேரியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- 070 581 1115

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் ஒட்டுமடம் காரைநகர் வீதியில் 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- யாழ் மானிப்பாய் வீதி ஆறுகால்மடச் சந்தி 1ம் ஒழுங்கை.
- யாழ் மாநகர சபை எல்லைக்குள்
- ஒரு பரப்பின் விலை முன்பகுதி 12 இலட்சம், பின்பகுதி 10 இலட்சம்.
- 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- யாழ் பஸ்நிலையம் 1 1/2 km தூரம்.
- ஒட்டுமடச் சந்தி 300m.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- காரைநகர் வீதியிலிருந்து இரண்டாம் காணி.

தொடர்பு:- 076 990 3039
077 468 3354

(CS 31563) A



## சாரணர் மாவட்டக் கிளை பருத்தித்துறையில் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4

இலங்கை சாரணர் சங்கத்தின், பருத்தித்துறை சாரணர் மாவட்டக் கிளைச்சங்க அலுவலகம், பருத்தித்துறை கந்த உடையார் ஒழுங்கையில் உள்ள கருணை இல்ல வளாகத்தில் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. மாவட்ட ஆணையாளர் புவனேந்திரராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன், பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வி.டக்ளஸ் போல், வடமராட்சிக் கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் மோகனசுந்தரம் தெய்வேந்திரா, பருத்தித்துறை வர்த்தகர் சங்கப் பொருளாளர் த.ஆதித்தன் ஆகியோர் சாரணிய கழுத்துப்பட்டி அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து மாவட்ட அலுவலகத்துக்கான பெயர்ப்பலகையை விருந்தினர்கள் இணைந்து திறந்துவைத்தனர். (க-100)

## ‘மாலைக்குள் மணம்’ ஹைக்கூ கவிதை நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஏப். 4

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய நிலைய தமிழ்மொழி கற்பித்தல் மாணவர்களின் ஏற்பாட்டில், கவிவேந்தர் பொன்.சுகந்தனின் ‘மாலைக்குள் மணம்’ எனும் இரண்டாவது ஹைக்கூ கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. யாழ் . பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கி.கந்தவேள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் எனப் பல ரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

## அராலி ச.ச.நிலையத்தில் விளையாட்டுப்போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.4

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 86ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, பல்வேறு விளையாட்டுப்போட்டி கள் மற்றும் சமூக நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டம் தழுவிய துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப் போட்டி மற்றும் நிலையச் சிறுவர்களுக்கான ஓட்டப் போட்டிகள், அங்கத்தவர்களுக்கான மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டப்போட்டி என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறும். (க)

**TECHNO WORLD**

TECHNO WORLD
INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

A/L தொழில்நுட்பக் கல்லூரி

இம்முறையும் மாவட்ட, தேசிய ரீதியில் அதிகளவான மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய ஒரே ஒரு நிறுவனம்.

**பொறியியல் தொழில்நுட்பவியல்**

| Name | Rsults | Rank | Name | Rsults | Rank | Name | Results | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| Kokulan | 3A (Vavu) | 01 | Danusikan | 3CS | 07 | Sathursan | B2C | 24 |
| Prasanth | 2CS | 01 | Saroopan | 2CS | 07 | Kobikan | B2C | 25 |
| Bavisarany | 2BC | 02 | Abisan | A2B | 10 | Saron | 3C | 34 |
| Birunthan | 2AB | 04 | Danusanth | ABC | 14 | Thanuran | B2C | 35 |
| Jalakan | 2CS | 05 | Piranavan | 2BC | 16 | Hariswaran | B2C | 37 |
| Harishan | 2BC | 06 | Dhulasithan | C2S | 20 | Hariharan | BCS | 38 |
| Jejaram | C2S | 06 | Kobikirushna | B2C | 23 | Sujeevan | BCS | 40 |

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்**

| Name | Rsults | Rank | Name | Rsults | Rank | Name | Rsults | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| Sinthusan | 2AC (MU) | 01 | Deveksh ına | 2CS | 13 | Jathusa | 3C | 37 |
| Kalaipiriyan | 3C | 04 | Dusanth | ABC | 14 | Santhiya | 3C | 41 |
| Kesiya | B2C | 04 | Laxshana | 2CS | 15 | Danusika | 2CS | 42 |
| Pirasath | BCS | 06 | Lasinthan | 2BS | 15 | Rukesh | 3C | 43 |
| Nilani | B2C | 07 | Siyan | ABS | 19 | Jasmine | 2CS | 46 |
| Bastini | BCS | 07 | Saranya | B2C | 21 | Nilaxsan | 2CS | 47 |
| Lambert | 3C | 08 | Abinaya | C2S | 24 | Kirusika | 3C | 49 |
| Parmitha | 2BC | 09 | Kabilan | BCS | 27 | Kajathiri | 3C | 50 |
| Mowsiga | 2CS | 10 | Sarujan | B2C | 28 | | | |
| Laxsan | ABC | 10 | Sayeena | B2C | 28 | | | |
| Kayalvili | C2S | 11 | Biruntha | B2C | 35 | | | |
| Jajini | ABC | 11 | Piratheesan | BCS | 36 | | | |

வெலிங்டன் சந்தி,
லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
077 017 5346



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 04.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media